www.Padasalai.Net www.CBSEtips.in

## எண்ணும் எழுத்தும் – முதல் பருவம் – 2023–24
## மாதத் தேர்வு (ஜுலை)

**வகுப்பு – 5** **சமூக அறிவியல்** **நேரம் : 45 நிமி**

**பெயர் :** **மதிப்பெண் :15**

---

**பத்தியைப் படித்து அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

சோபியா படிக்கும் பள்ளியில், மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமையன்று சென்னைக்குக் கல்வி சுற்றுலா சென்றனர். சென்னையில் பல இடங்களை சுற்றிப் பார்த்துவிட்டு, மாலை பிர்லா கோளரங்கத்திற்கு சென்றனர்.

மாணவர்கள் தொலைநோக்கி வழியாக செவ்வாய், வியாழன், புதன் போன்ற கோள்களையும் நட்சத்திரக் கூட்டங்களையும் கண்டனர். அங்குள்ள 360 டிகிரி கோண வானத் திரையரங்கில் சூரிய குடும்பம், வானம், விண்மீன் மண்டலங்கள், விண்கற்கள், எரிகற்கள், வால் நட்சத்திரங்கள், பல்வேறு பேரண்ட நிகழ்வுகள் பற்றிய காணொளியைக் கண்டு வியந்தனர் . வான் திரையில் பார்ப்பதற்கு, பூமி மிக அழகாக இருந்தது.

**வினாக்கள்:**

1. தொலைநோக்கி வழியாக மாணவர்கள் பார்த்த மிகப் பெரிய கோள் எது?

   அ) நெப்டியூன் ஆ) சனி இ) வியாழன் ஈ) புதன்

2. வானத்திரையரங்கில் காண்பிக்கப்பட்ட எரிந்து கொண்டே விழும்பொருள் எது?

   அ) எரிகற்கள் ஆ) வால் நட்சத்திரங்கள்

   இ) விண்கற்கள் ஈ) விண்மீன்கள்

3. சோபியா தொலைநோக்கியில் பார்க்காத கோள்கள் எத்தனை? அவற்றின் பெயர்களை எழுதுக?

4. பூமியை உள்ளடக்கிய விண்மீன் மண்டலத்தின் பெயரினை எழுதுக

5. "வான் திரையில் மாணவர்கள் பூமியின் அழகைக் கண்டு ரசித்தனர்". பூமியை பாதுகாக்க நீ என்ன செய்வாய்?

**விடைகள் :**

1) ஈ )வியாழன்

2) அ) எரிகற்கள்

3) 4 – வெள்ளி , சனி, யூரேனஸ் , நெப்டியூன்

4) பால் வழி மண்டலம்

5) மரங்களை வளர்ப்பேன், நெகிழியைத் தவிர்ப்பேன் (சொந்த கருத்துகளை எழுதவும் )



Scanned with OKEN Scanner
Kindly send me your study materials to padasalai.net@gmail.com